REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

தவறியவர்கள் தேறினர்

புனு, ஆக 23—

புனு பல்கலைக் கழக பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு, பரீட்சையில் தவறிவிட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களில் 19 பேர் தேறிவிட்டதாக இப்போது அறிவிக்கப்பட்டதாம்.

செய்தியறிந்த மாணவர்கள், குதூகலப்பட்டிருக்கின்றனர்.

சில நிர்வாக அசௌகரியங்களினாலேயே திருத்தத்தை அறிவிப்பதற்கு தாமதமானதாக பல்கலைக் கழக அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்களாம்.

மலர் 3] சென்னை: ஆவணி 9உ வியாழன் (25—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 10உ வெள்ளி (26—8—55) [இதழ் 62

காமராசர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

'கழகத்துடன் தொடர்பு' என குற்றச்சாட்டு

காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட பெருமாள்சாமி முயற்சி?

ஆச்சாரியாரின் தூண்டுதலா?

சென்னை, ஆக. 24—

சென்னை முதன் மந்திரி காமராசர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

காங்கிரசிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருப்பவரும், முன்னுள் மந்திரியுமான சி. பெருமாள்சாமி ரெட்டியார் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறர் எனத் தெரிகிறது!

ஏற்கனவே 18 சட்டசபை உறுப்பினர்களிடம், காமராசர்மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தித் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் கையெழுத்து வாங்கப்பட்டு விட்டதாம்.

அந்தக் காங்கிரசாரால், 'வகுப்புவாத இயக்கம்' என்று வர்ணிக்கப்படுகிற 'திராவிடர் கழக'த்துடன், காமராசர், துரதிருஷ்டவசமாக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறர் என்பது, குற்றச்சாட்டுக்களில் முதலிடம் பெறுகிறதாம்!

முன்பு, ஆச்சாரியார்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த சில உறுப்பினர்கள் கூட, இப்போது, காமராசருக்கும் எதிராக நடைபெறும் இந்த 'பெருமாள்சாமி முயற்சி'யில் ஒத்துழைக்கின்றனராம்!

அவர்களில் ஒருவர், தாங்கள், 'காமராசரால் காட்டிக் கொடுக்கப்பட்டு விட்டதாக'க் கூறியிருக்கிறாராம்!

பெருமாள்சாமி ரெட்டியார், இதர மூவருடன், காங்கிரசுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டவர்; அவர், மேல் (சட்ட) சபையில் ஒரு உறுப்பினரும்கூட!

வட ஆற்காடு மாவட்ட கழகத் தேர்தலில் காங்கிரசின் அதிகாரபூர்வமான நபரின் நியமனத்திற்கு எதிராக வேறு ஒருவரைத் தேர்தலில் நிறுத்தினர் என்று கூறப்பட்டது; ஆனால், பெருமாள்சாமி கோஷ்டியினர், 'காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான நியமனம் பெற்றவர் 'ஒரு கழக வாதி'— [illegible] சர்க்காருக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்' என்று குற்றஞ் சுமத்துகின்றனராம்.

இந்த 'பெருமாள்சாமி முயற்சி', நிச்சயம் தோல்வி பெறும் என்று காமராசரை ஆதரிக்கும் சட்டசபை உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனராம்.

மேலும், சமீபத்தில் சர்க்கார் எழுப்பிய கடனுக்கு, கேட்டதற்கு மேலாகவே கிடைத்த தொகை, சர்க்கார் மீது மக்கள் காட்டும் ஆதரவின் அளவைக் குறிப்பதாகவும் காமராசர் கோஷ்டியினர் கூறிக்கொள்கின்றனராம்!

பம்பாயில், ஆச்சாரியார், 'சென்னையைவிட இங்கு நல்ல ஆட்சி நிலவுகிறது' என்று குறிப்பிட்டது, காமராசர்மீது ஏவப்பட்ட 'நேரடித் தாக்குதல்' என்றும், ஆச்சாரியாரின் பம்பாய் பேச்சுக்கும்— 'பெருமாள்சாமி முயற்சி'க்கும் தொடர்பில்லாமலிருக்க முடியாது என்றும் சட்டசபை அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஆச்சாரியார், காமராசர் மீது நடத்திய 'தாக்குதல்' கண்டு அவரை ஆதரிக்கும் சில சட்டசபை உறுப்பினர்களே அருவெறுப்பு அடைந்து, அவரைக் கண்டித்தனர் என்றும், இதன் மூலம் தமிழ்நாடு காங்கிரசில் காமராசரின் செல்வாக்கு மேலும் ஒரு படி உயர்ந்திருப்பதாகவும், காமராசரை ஆதரிக்கும் சட்டசபை உறுப்பினர்கள் எண்ணுகின்றனராம்!

15,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்?

நிர்வாகிகளுக்கு 'நோட்டீஸ்'

கான்பூர், ஆக. 23—

இங்குள்ள ஆறு ஆயுதத் தளவாட நிறுவனங்களில் வேலை செய்யும் சுமார் 15,000 தொழிலாளர்கள், தங்கள் கோரிக்கைகள், வரும் செப்டம்பர் 12-ந் தேதிக்குள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், அன்றிலிருந்து, வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக நிர்வாகிகளுக்கு நோட்டீஸ் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

கைதிகள் பட்டினிப் போர்: 64 பேர்கள் ஈடுபட்டனர்!

விடுதலை செய்ய கோருகின்றனராம்

குவாலியர், ஆக 23—

கடந்த ஆகஸ்டு 16-லிருந்து குவாலியர் மத்திய சிறையில் சுமார் 44 கைதிகள் பட்டினிப் போரில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள், தங்களை கண்காணிப்புடன் விடுதலை செய்யவேண்டும் என்று கோருகின்றனராம்.

அவர்களில் 24 பேர்கள் இப்போது பட்டினிப்போரை நிபந்தனை ஏதுமின்றி கைவிட்டுவிட்டதாக சர்க்கார் குறிப்பொன்று கூறுகிறது.

"இன்னும் 20 பேர்கள் மட்டுமே உண்ணாமலிருக்கின்றனர்; அவர்களின் நிலை திருப்திகரமாகவே இருக்கிறது; இவர்களுக்கு ஆதரவாக உண்ணாமலிருக்கத் துவங்கிய 64 கைதிகள் இப்போது விரதத்தைக் கைவிட்டுவிட்டனர்" என்று சர்க்காரின் அறிக்கை கூறுகிறது.

கிருஷ்ணா நதியில் படகு கவிழ்ந்தது

பலர் உயிரிழந்த கோரம்

கிருஷ்ணா நதியில், 40 பிரயாணிகளை ஏற்றி வந்த பொது மராமத்து இலாகாவுக்குச் சொந்தமான படகு ஒன்று கவிழ்ந்ததினால் சுமார் 30 பேர்வரை நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பர் என அஞ்சப்படுகிறது.

10 பேர் மட்டும் காப்பாற்றப்பட்டோ, நீந்தியோ கரை சேர்ந்திருக்கின்றனர்.

கடந்த 1952 செப்டம்பர் 9-ந் தேதியன்று சில என்ஜினியர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்த அதே இடத்திலேயே இப்போதும் இந்தப் படகு கவிழ்ந்ததாம்!

லாகூர் சிறையில் அமளி

கைதிகள் விளைவித்த குழப்பம்!

லாகூர், ஆக. 24—

லாகூர் மத்திய சிறையில் ஏற்பட்ட ஒரு கலகத்தினால் மூன்று சிறை அதிகாரிகள், வார்டர்கள் உட்பட 30 பேர் காயமடைந்தனர் என்று தெரிகிறது.

ஒரு தலைமை வார்டரை மூன்று பேர்கள் சேர்ந்து தாக்கி, அவரிடமிருந்த கொத்துசாவியைப் பறித்துக் கொண்டு, சிறையினுள் உள்ள மத்திய கட்டிடத்தின் மீது ஏறி, அங்கிருந்த காவலாளியைக் கீழே தள்ளி அட்டகாசம் செய்திருக்கின்றனர். அங்கிருந்தபடியே அவர்கள் சிறை அதிகாரிகளையும், கைதிகளையும் கற்களால் தாக்க முற்பட்டிருக்கின்றனர்.

அந்த மூன்று பேர்களும் 20 ஆண்டு கடுங்காவல் தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களாம்.

அவர்கள் தலைமை வார்டரைத் தாக்கி விளைவித்த கலகம் சிறை முழுவதும் பெரும் குழப்பத்தை மூட்டியதாம்!

கொள்ளைச் சம்பவங்கள்...

165 பேர் கொல்லப்பட்டனர்!

இந்தூர், ஆக. 24—

"கடந்த ஐந்தரை மாத காலத்தில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களில் 165 பேர் கொல்லப்பட்டனர்; ரு. 4,86,916 மதிப்புடைய சொத்துக்களைக் கொள்ளையிட்டதற்காக 186 கொள்ளையர்கள் தண்டிக்கப்பட்டனர்" என்று, மத்திய பாரத சட்டசபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிராகரித்தார்!

தென்னாப்பிரிக்க இந்தியர், பாகிஸ்தானியர் ஆகியோர் பிரச்சினை சம்பந்தமாக ஐ. நா. நடுநிலையாளர் ஒருவரை நியமிப்பதாக ஐ. நா. செயலாளர் தெரிவித்த யோசனையை, தென்னாப்பிரிக்க அயல்நாட்டமைச்சர் நிராகரித்துவிட்டாராம்!

பேச்சுவார்த்தை முறிவு

ஐ. நா. அதிகாரி முன்னிலையில், காஜா எல்லைப் பகுதி நெருக்கடி பற்றி இஸ்ரேல் நாட்டுடன் நடத்தி [illegible] முறிந்துகொண்டுவிட்டதாம்.

காங்கிரஸ் மந்திரி சபையை ஒழிக்க முயற்சி

பதினைந்து கட்சிகளின் 'முன்னணி'

பாட்னா, ஆக. 23—

பிகாரில் உள்ள காங்கிரஸ் மந்திரிசபையை, பதவியை விட்டுத் துரத்துவதற்காக ஆர்ப்பாட்டம் செய்யும், 'சிவில் உரிமைகளை [illegible]' நாட்டவுமாக சில வட்டார இயக்கங்கள் உட்பட, 15 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளடங்கிய கூட்டமொன்றில் 'ஐக்கிய முன்னணி' ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

'சிவில் உரிமைகளைப் பறித்து காங்கிரஸ் மந்திரி சபை, ஒரு போலீஸ் ஆட்சியை நிறுவியுள்ளதாக முன்னணியின் அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாட்னா ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தாசு சின்ஹா என்பவர் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த முன்னணியில் கம்யூனிஸ்டு கட்சி, இந்து மகா சபை, ஜன சங்கம், 'ராம்ராஜ்ய பரிஷத்', 'பார்வார்ட் பிளாக்', மற்றும் லோகியா கோஷ்டியைச் சேர்ந்த சோஷலிஸ்டுகள், ஜனதா கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கு பெற்றிருக்கின்றனராம்.

வரும் செப்டம்பர் 4-தேதியன்று நாடெங்கும் அடக்குமுறை எதிர்ப்பு நாள் கொண்டாட வேண்டும் என்றும், செப்டம்பர் 12-ந் தேதியன்று மாநில சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்றும், முன்னணியின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்!

தாராசிங் சிறை மாற்றம்

அமிர்தசரஸ், ஆக. 23—

சிரோமணி அகாலிதளத் தலைவரான மாஸ்டர் தாராசிங், அமிர்தசரஸ் மாவட்ட சிறையிலிருந்து வேறு சிறைக்கு மாற்றப்பட்டுவிட்டார் என்று தெரிகிறது.

இரயில் ஏறி 6 அகதிகள் மரணம்

பாதை மீது படுத்து இரயிலைத் தடுத்தனராம்

கல்கத்தா, ஆக. 24—

ஆயிரக்கணக்கான அகதிகள், தங்களுக்குத் தரப்படும் பணம் கிடைப்பதில் தாமதமேற்படுவதாகக் கூறி, குர்மிதோலா அகதிகள் முகாமிலிருந்து கிளம்பி அருகிலிருந்த இரயில் தண்டவாளத்தில் படுத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டிருக்கின்றனர்; கல்கத்தா செல்லும் லால்கோலா பாசஞ்சர் வண்டி அந்த வழியே வந்தபோது, அகதிகள், தண்டவாளத்திற்கு அருகில் கூடியிருப்பதைக் கண்டதும், வேகம் குறைக்கப்பட்டும், ரயிலை உடனே நிறுத்தமுடியாது போகவே, எஞ்சின் ஏறி, ஆறு அகதிகள் மாண்டிருக்கின்றனர்; எட்டு பேர்கள் படுகாயப்பட்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பாதுகாப்பளிக்க சர்க்கார் முன்வந்திருக்கின்றனர்.

வண்டியின் வேகம் குறைந்ததுமே கூடியிருந்த அகதிகள், இரயிலில் ஏறி கலவரம் செய்ய முற்பட்டிருக்கின்றனர். இரயில் பாதையில் படுத்திருந்தவர்களை நெருங்குமுன் வண்டி நிறுத்தப்பட முடியாது போகவே எஞ்சின், அகதிகள் மீது ஏறிய இந்தச் சோகச் சம்பவம் நடைபெற்றதாக சர்க்கார் குறிப்புக் கூறுகிறது

சம்பவத்திற்குப் பிறகு எஞ்சின் ஓட்டியும், இதர இரயில் வண்டி அதிகாரிகளும் அகதிகளால் தாக்கப்பட்டனராம்!

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—8—'55 வியாழன்

'நாகரீகம்' மிகுந்த நாட்டில்......!

அமெரிக்கா! உலகின் மிகப் பெரிய வல்லரசுகளுள் ஒன்று. 'மலை உச்சி' மாநாடுகளில் கலந்துகொள்ளும் நான்கில் முக்கியமானது.

அமெரிக்கா! "இன்று அகிலம் முழுவதையுமே 'டாலர் வலை' வீசி விலை பேசிடும் 'ஆற்றல்' கொண்டது! செல்வம் கொழிக்கும் பூமி! நாகரீகம் மிகுந்த நாடு!"—என்றெல்லாம் கூறப்படுவதைக்காட்டிலும், "அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்குவதின்மூலம், சுதந்திரம் பெற்றுள்ளவர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகிறோம்; நாம் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதைப் போலவே பிறருக்கும் சுதந்திரம் வழங்குவதுதான் யோக்கியமானது," என்று கூறி, நீக்ரோவர்களுக்கு 'விடுதலை' வழங்கிய ஆபிரகாம் லிங்கனைப் பெற்ற அமெரிக்கா என்று கூறப்படுவதிலேயே உண்மையான பெருமை அதிகம் என்று, விடுதலை விரும்பிகள் எண்ணுவர்.

அமெரிக்காவில் நீக்ரோவர்களுக்கு விடுதலை வழங்கிய ஆபிரகாம் லிங்கன், அமெரிக்க மக்களின் போற்றுதலுக்கு மட்டுமின்றி, உலகத்தவரெல்லோரின் பாராட்டுதலுக்கும் உரியவரானார்.

மனிதர்கள் — கறுப்போ — வெள்ளையோ—எந்த நிறத்தவரானாலும், எந்த இனத்தவரானாலும், எந்த மதத்தவரானாலும், எந்த நாட்டவரானாலும்—எல்லோருமே மனிதர்கள்; எல்லோருக்கும் இயற்கையாகவே உள்ள எல்லா உணர்வுகளும், உணர்ச்சிகளும் இருக்கின்றன என்பது பொது உண்மை.

அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுப்பதும், தனக்கு மட்டுமே மனித உணர்வும், உணர்ச்சியும் உண்டென்று எண்ணி, பிறரின் உணர்வையும், உணர்ச்சியையும் மதிக்க மறுப்பதும் மிக அநாகரீகமானது; அதிலும், பிறரின் உணர்வையும், உணர்ச்சியைரும் அடக்கி ஒடுக்க நினைப்பது, அநாகரீகமானதுமட்டுல்ல — காட்டுமிராண்டித்தனமானதும் கூட-என்பதினால்தான் 'நீக்ரோவர்களை—அவர்கள் நிறத்தால் கறுப்பாயும், தோற்றத்தால் சற்று அருவருக்கத்தக்கவர்களாயுமிருப்பதாலேயே— அவர்களை அடிமை கொண்டு, அவர்களின் மனித உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் மட்டந் தட்டிவைத்திருக்கக் கூடாது—அவர்களுக்கு சுதந்திரம் வழங்குவது அவசியம்" —என்று கூறி, நீக்ரோவருக்கு விடுதலை பெற்றுத் தந்தார் ஆபிரகாம் லிங்கன்.

உலகில், எங்கெங்கு தங்களின் உரிமைகளும், சுதந்திரமும் பறிக்கப்பட்ட மக்கள்—அடிமை நிலையிலிருந்த மக்கள் வாழ்ந்தனரோ, வாழ்கின்றனரோ அவர்கள் எல்லோரும் 'தன்னைப்போலவே பிறரையும் மதித்து நட'—என்று கூறிய லிங்கனை, 'விடுதலை வீரன்' என்று பாராட்டினர்.

தங்களின் விடுதலையைப் பறித்துவைத்திருக்கும் ஆதிபத்தியக்காரர்களுக்கு அடிமைப்பட்ட மக்கள், லிங்கனின் நெஞ்சத்தைச் சுட்டிக்காட்டினர்; 'லிங்கனை முன்மாதிரியாகக் கொள்ளுங்கள்' என்று ஆதிபத்தியக்காரர்களுக்கு எடுத்துரைக்க முனைந்தனர்.

அந்த 'விடுதலை வீரனை'ப் பெற்ற அமெரிக்காவிற்கு, ஒரு தனிப் பெருமையும் புகழும் கிடைத்தது.

"அந்த அமெரிக்காவில்தான் இன்னமும்கூட—'லிங்கன் பரம்பரையினர்' பலர் தோன்றிவிட்ட இன்றைய நிலையிலும் கூட நிறவெறி தலைதூக்குகிறது" என்று செய்திகள் கூறுகின்றன.

'அமெரிக்கப் பள்ளிகளில், நீக்ரோவ மாணவருடன் சேர்ந்து பயிலமாட்டோம்,' என்று கூறும் வெள்ளை இன மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக சென்ற ஆண்டில் செய்தி வந்தது.

அமெரிக்க தலைமை உயர் நீதிமன்றம், 'நீக்ரோவர்களுக்கும் வெள்ளையருக்குமிடையே பாகுபாடு காட்டக்கூடாது,' என்று தீர்ப்பளித்ததின் எதிரொலியாகவே அந்த மாணவர் கிளர்ச்சி நடைபெற்றதாகச் செய்திகள் கூறின.

பின்னர் அது பற்றிய தொடர்ச்சியான செய்திகள் சரிவரக் கிடைக்கவில்லை.

இப்போது அமெரிக்க நகரம் ஒன்றில் உள்ள 'சர்வதேச' விமான நிலையத்திலிருக்கும் உணவு விடுதியில், ஒரே அறையில், வெள்ளையருக்கும்—நீக்ரோவருக்கும் ஒன்முக உணவு பரிமாறக்கூடாது—என்பதால் அங்கு உணவருந்தச் சென்ற இந்தியத் தூதுவர் மேத்தாவையும், அவரது செயலாளரையும் 'நீக்ரோவர்' என்று நினைத்து உணவு வழங்க மறுத்துவிட்டனராம்.

நடைபெற்ற சம்பவத்திற்காக, இந்தியத் தூதுவருடையவும், இந்திய சர்க்காருடையவும் மன்னிப்பை அமெரிக்கா கோரியிருக்கிறதாம்.

'இந்தியர்கள் நீக்ரோவர்கள்' என்றெண்ணப்பட்டதற்காகத்தான், அமெரிக்க சர்க்கார் வருந்தி மன்னிப்பு கேட்கிறதே தவிர—அமெரிக்கப் பகுதியில் டெக்சாஸ் வட்டத்தில் உள்ள சட்டப்படி, வெள்ளையருடன் ஒன்முக அமர்ந்து உணவருந்த நீக்ரோவருக்கு உரிமை இல்லை—என்ற கொடுமைக்காக, அவல நிலைக்காக, அநாகரீகப் பண்பிற்காக அல்ல!

நீக்ரோவருக்கு விடுதலை பெற்றுத் தந்த லிங்கன் பிறந்த நாடுதான் அமெரிக்கா! அங்குதான், இன்னும் இந்த அவலநிலை!

அமெரிக்காவிலேயே இந்த நிலைமை என்றால், ஆப்பிரிக்காவில் எப்படியெல்லாமோ நீக்ரோவர் நடத்தப்படுவது ஆச்சரியத்திற்குரியதல்லவே! ஏனெனில், அங்கு ஒரு லிங்கன் பிறந்திலலையே!

அகிலத்தை விலைபேச டாலரும்—அகிலத்தையே அழிக்கும் அணுகுண்டு ஆற்றலும் இருந்தால் மட்டுமே, அல்லது, சுகபோகிகளாக வாழும் வாய்ப்புப் பெற்றிருப்பதினால் மட்டுமே 'அமெரிக்க மக்கள் உண்மையான நாகரீக உள்ளம் கொண்டவர்' என்று, கருதப்பட முடியாது—நீக்ரோவர், கறுப்பர் என்று ஒதுக்கப் படுகிற நிலை ஒழியும் வரை!

என்ன செய்வது? 'ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவிலேயே கேலி செய்யப்படுகிறார்' என்றுதான், 'விடுதலை விரும்பி'கள் கூறுவர்!

இராமேசுவரத்தில் கடல் அரிப்பு

கிராமம் முழுவதும் காலி செய்யப்படும்?

பாதுகாப்பு சுவர்கள் எழுப்பப்படுமென அறிவிப்பு

சென்னை, அக். 23—

சென்னை சட்டசபையில், இராமேசுவரம் பகுதியில் கடலரிப்பு நிலைமை பற்றியும், பாதிக்கப்படுவோருக்கு அளிக்கப்பட்டு வரும் நிவாரணம் பற்றியும் ஒரு அறிக்கை சமர்ப்பித்து, மராமத்து இலாகா அமைச்சர் கூறினார்:—

"1951-ல் கடலரிப்பு ஆரம்பமாயிற்று; 1954-ல், அது பலமாகிவிட்டது; பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென மக்கள் சபையில் வற்புறுத்தப்பட்டது; இந்நிலையில், 'கிராமம் முழுவதையும் காலி செய்து, வேறு இடத்தில் அக்கிராம மக்களின் புனர் வாழ்வுக்கு வகை செய்வதுதான் நன்மையானது' என்று தெரிவிக்கப்பட்டது;

"தனுஷ்கோடியிலுள்ள கப்பல் துறையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்காகத் தக்க இடமொன்றைத் தேர்ந்தெடுக்க நிபுணர் குழு ஒன்று நியமிக்கும் யோசனை அங்கீகரிக்கப்பட்டுள்ளது; அக்குழுவின் அறிக்கை வந்தபின்னர், அதுபற்றி கவனிக்கப்படும்;

"சென்னை எஞ்சினீயர்களின் யோசனைப்படி, கடலரிப்பைத்தடுப்பதற்கு மூன்று பாதுகாப்பு சுவர்கள் எழுப்பப்படும்; கடலோரத்தில் 350 அடி தூரம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பரீட்சார்த்தமாக செய்யப்படுகின்றன; மேற்கொண்டும், நடவடிக்கைகள் ஆராயப்படுகின்றன;

"கடலரிப்பால் பாதகமடைந்த தனுஷ்கோடியிலுள்ள மீனவர்களுக்கும், இரயில்வே ஊழியர்களுக்கும் தக்க நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது."

ரூ. 3,50,00,000-க்கு வளையல்கள் உற்பத்தி

உத்திர பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது

உத்திர பிரதேசத்திலுள்ள பிரோஜ்பாத், கண்ணாடி வளையல் உற்பத்தி செய்வதில் முன்னணியில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆண்டிற்கு ரூ. 3½ கோடி பெறுமானமுள்ள வளையல்கள் அங்கு உற்பத்தி செய்யப்படுவதாக 'சர்வே' மூலம் தெரியவந்துள்ளது.

காவிரிக்குக் குறுக்கே புதிய பாலம்

ரூ. 37 லட்சம் செலவிடப்படும்

திருச்சி, ஆக. 24—

காவிரிக்குக் குறுக்கே புதிய பாலம் ஒன்றை அமைக்க சர்க்கார் அனுமதித்திருப்பதாகவும், இதற்காக ரூ. 37 இலட்சம் ஒதுக்கியிருப்பதாகவும் தெரிகிறது. உடனடியாக வேலை துவக்குவதற்காக ரூ. 2-இலட்சம் அனுமதித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

'தமிழின் பழம்பெருமையை மீண்டும் நிலைநாட்டுவோம்'

'முன்னேற்றக் கருத்துக்களை நாட்டில் புகுத்துவதற்கு வழிகாட்டிகளாவோம்'

திருச்சி புனித ஜோசப் கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் சார்பில், 17—8—55 மாலை 5½ மணிக்கு, இலாலி மன்றத்தில், 'கல்லூரிப் பாடங்களைத் தமிழில் போதிக்கவேண்டும்' என்ற தீர்மானத்தின் மீது திரு. இருதயசாமி தலைமையில் சொற்போர் நடைபெற்றது.

தீர்மானத்தை திரு. அ. இருதயராஜ் கொண்டுவந்து, "கல்லூரிகளில் பாடங்களை தமிழில் போதிக்க முடியாதென்பது சரியல்ல; தமிழ் நாட்டில் தொன்றுதொட்டே பல்கலைக் கழகங்கள் இருந்து வந்திருக்கின்றன; ஆங்கிலம் கற்றால்தான் வெளியுலகு செல்ல முடியுமென்றால் பண்டைத் தமிழகத்தின் வரலாற்றில் உரோமாபுரி, கிரேக்கம், எத்தியோப்பியா சென்றதெப்படி? எனவே, தமிழ் மொழியில் போதிப்பதன் மூலம் அதன் பழையபெருமையை நாம் மீண்டும் கொண்டு வந்தவர்களாவோம்; 'இருந்தபடியே இருக்கட்டுமே' என்ற பத்தாம் பசலித்தனத்தை விட்டு முன்னேற்றக் கருத்துக்களை நாம் ஏன் புகுத்தித் தொடர்ந்து வைக்கக் கூடாது? ஏன் நாம் வழிகாட்டியாக இருக்கக் கூடாது," என்று விளக்கியுரைத்தார்.

தீர்மானத்தை வெட்டி திரு. சம்மனசு பேசுகையில், "தமிழில் முடியாதென்று நான் மறுக்கவில்லை—காலம், பொருள் ஆகியவற்றைப் பார்த்துச் செய்யவேண்டும் என்றும், ஆஸ்மானியா பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழுவின் முடிவை மேற்கோள் காட்டியும், "ஒரு புதிய தமிழ்ச் சொல்லை புரியவைக்கப் பக்கத்தில் தற்போது வழக்கிலிருக்கும் இரண்டொரு சொற்களைப் போடவேண்டிவரும்-எனவே, குழப்பம்தான் அதிகரிக்கும்—பொருள் நஷ்டம்," என்றும் குறிப்பிட்டார்.

மற்றும் தோழர்கள் குமாரசாமி ராஜா, வெங்கடாசலம் ஆகியோர் தீர்மானத்தை ஒட்டியும், தோழர்கள் சாமிமுத்து, சீதாராமன் ஆகியோர் தீர்மானத்தை வெட்டியும் பேசினர்.

வாக்கெடுப்பு நடைபெற்றது: பேரவையின் பெரும்பான்மையோரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர், மாணவர்களை, நன்கு சிந்தித்து அவசரமின்றி நல்ல முடிவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டார்.

ஐ. நா. சபையில் கோவா பிரச்சினை?

கோவா பிரச்சினையை ஐ. நா. சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் யோசித்திருப்பதாகச் சொல்லப்படுவதுபற்றி தமக்குத் தெரியாதென்றும், அம்மாதிரியான யோசனை இருப்பதாகக் கூறப்படுவதைத் தாம் சந்தேகிப்பதாகவும், மக்கள் சபையில், பிரதமர் நேரு கூறியுள்ளார்.

★

'சரித்திரத்தின் போக்கை உணராதவர்கள்'

"அந்நிய காலனி ஆட்சியாளர்களின் அடிமைகளாக இனி கோவா மக்கள் இருக்க முடியாது; சரித்திரத்தின் போக்கையும், இந்தியப் பகுதி மக்களின் வலிமையையும் அறியாமல், அறப்போர் வீரர்களை போர்ச்சுகீசியர்கள் படுகொலை புரிந்தனர்; இந்தப் பலாத்காரச் செயல்கள், மனித தர்மத்திற்கே எதிரானது; ஆசிய மக்களுக்கு எதிரான அறை கூவல் போன்றது,"

என்று, சீனத் தலைநகர் பீகிங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில், சீன-இந்திய நட்பு சங்கத் தலைவர் கூறியுள்ளார்.

உணவு உற்பத்தி பெருக்கம்

மாநில திட்டங்கள் குறித்து சென்னை விவசாய மந்திரி

"உணவு உற்பத்தியில் மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் நிர்ணயித்த இலட்சிய எல்லை அளவுகளை சென்னை சர்க்கார் முழுவதுமாக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்;

'திட்டப்படி, சென்னை 7,14,000 டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டும்; ஏற்கனவே சென்னை 1,14,000 டன் அதிக உற்பத்தி செய்துவிட்டது; எஞ்சியுள்ள 6 லட்சம் டன்னும், விவசாய திட்டங்களை தீவிரமாக அமுல் செய்வதின் மூலம் உற்பத்தி செய்யப்படும்,"

என்பதாக, மாநில உணவு மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

"10 இலட்சம் டன் கரும்பு, 60 000 டன் சர்க்கரை 1,05,000 மூட்டை பருத்தி, 1,40,000 டன் எண்ணெய் விதைகள் முதலியனவும் அதிக உற்பத்தி இலட்சிய எல்லைகளாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன,"

என்றும், மந்திரி தெரிவித்திருக்கிறார்

முந்திரி பருப்பு, மிளகு, பாக்கு முதலியனவற்றின் அதிக உற்பத்திக்கும் திட்டங்கள் இருப்பதாகவும், சுமார் 40 விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூ. 19-கோடி வரையில் செலவழிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ரூ.1000-த்திற்கு மேல் ஊதியம் பெறுவோர்!

வெளிநாட்டு நிறுவனங்களில் உள்ளவர் எண்ணிக்கை

புதுடில்லி, ஆக 23—

"வெளிநாட்டவர் நிறுவனங்களில், தொழில் நுணுக்க உத்தியோகங்களில் 1,543 இந்தியர்களும், 2,779 இந்தியரல்லாதாரும், இதர உத்தியோகங்களில் 2,324 இந்தியர்களும், 3,751 இந்தியரல்லாதாரும், 1955 ஜனவரி 1-ந் தேதியக் கணக்குப்படி ஒரு ஆயிரமும் அதற்கு மேலும் சம்பளம் வாங்குபவர்களாக உள்ளனர்," என்று, ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ தெரிவித்திருக்கிறார்.

இந்தியக் கடற்படைக்கு பிரிட்டிஷ் கண்ணிவாரிகள்

'பிம்லிப்பட்டணம்,' 'பேசின்' என்று பெயரிட்ட இரண்டு கண்ணிவாரிப் படகுகளை பிரிட்டனிலிருந்து இந்தியா வாங்கியிருக்கிறது. இவை, சமீபத்தில், பிளிமௌத் துறைமுகத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டன. நீண்ட தூரப் பிரயாணம் செய்வதற்கு இவை இலாயக்கில்லை; ஆகவே, எரிபொருளை எடுத்துக்கொள்ள, வழியிலுள்ள துறைமுகங்களில் தங்கி, இரண்டு மாதங்களுக்குப் பிறகு இந்தியா வந்து சேரும்; இந்தியக் கடற்படையில் இவை சேவை செய்யும்.

கோவா படுகொலை: தமிழகமெங்கும் கண்டனம்

★

கோவாவில் அறப்போர் தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தைக் கண்டித்து தமிழகத்தில் ஊர் வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்று, கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அவை இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன :—

சென்னை- ஆயிரம்விளக்கு

18—8—55 மாலை 6 மணியளவில், சென்னை ஆயிரம்விளக்கு அஜீஸ் முல்க் 3-வது தெருவில் உள்ள திரு. வி. க. மன்றத்தில், தோழர் கா. இந்திரவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ வீராசன், கணேசன், எஸ் டி. சுந்தரம், வ. சரவணன், ஜீனியர், கண்ணதாசன், டி. ஜி. விந்தன் மற்றும் பலரும் கோவா வெறிச் செயலைக் கண்டித்துப் பேசினர். உயிர் துறந்த வீரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட நேரம் மௌனமாக இருந்தனர்.

வட சென்னை

19—8—55 இரவு 8½ மணிக்கு, வடசென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற இல்லத்தில், தோழர் அரியநாதன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் கோவா அட்டூழியத்தைக் கண்டித்தும், உயிர் துறந்த வீரத் தியாகிகளுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—சேத்துப்பட்டு

வ உ. சி. இளைஞர் கழக இரவுப் பள்ளி கோவா படுகொலையைக் கண்டித்தும், உயிர் துறந்த தியாகிகளுக்கு வணக்கம் செலுத்தும் முறையிலும் 18—8—55ல் மூடப்பட்டது.

அம்பத்தூர்

18—8—55 காலை 8 மணிக்கு, டி. ஐ. சைக்கிள் பாக்டரி எம்பிளாயீஸ் யூனியன் சார்பில், டி. ஐ சைக்கிள் பாக்டரி தொழிலாளர்களும், கம்பெனி சிப்பந்திகளும், தொழிற்சாலைக்குள் ஆர்த்தால் நடத்தினர். பிரம்மாண்டமான ஊர்வலமும், மதுவிலக்கு போலீஸ் ஸ்டேஷன் அருகாமையிலுள்ள மைதானத்தில், திரு. ராமானுசலு தலைமையில் கண்டன, அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் சி. எம். இராமமூர்த்தி, ஜி. எஸ். ரங்கராஜுலு; அருள்மணி, வேணுகோபால், இராமரத்தினம் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் அனுதாப, கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டம் முடிந்தவுடன், சென்னை சர்வகட்சிக் கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நாகை

21—8—55 மாலை 5 மணிக்கு, நாகை நகர காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில், சர்வ கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தி. மு கழகச் சார்பில் தோழர்கள் கே. கே. சித்திரவேலு, எஸ் கல்யாணம் ஆகியோரும், காங்கிரஸ் சார்பில் ஏ. எம். பி. பாலகங்காதரன், அருணாசலம் ஆகியோரும், கம்யூனிஸ்டு சார்பில் வி. மகாலிங்கம், காளிமுத்து ஆகியோரும், பி. சோ. சார்பில் என். எம். நாகராஜுவும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், போர்ச்சுகீசிய சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், 26—8—55ல், நாகையில், சர்வ கட்சிகளின் சார்பில் ஊர்வலமும், பொதுக்கூட்டமும், கடையடைப்பும் நடத்தி தங்கள் கண்டனத்தைத் தெரிவிப்பது என்றும், கடையடைப்பு நடவடிக்கை வெற்றி பெற பொது மக்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள் யாவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டும், இதனை நடத்துவதற்கென பல கட்சி உறுப்பினர்களையும் கொண்ட குழு ஒன்றை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பூர்

18—8—55ல், கோவா அடக்குமுறையைக் கண்டித்து, திருப்பூர் நகர் முழுவதும் கடையடைப்பு நடைபெற்றது. வேலை நிறுத்தத்தில் எல்லாக் கட்சித் தோழர்களும் கலந்துகொண்டனர். மாலை 4 மணிக்கு தொழிலாளர் ஊர்வலமொன்று நடைபெற்றது. ஊர்வலத்தை தி மு. கழகம், சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் நடத்தி வைத்தனர்.

பின்னர், பெண்கள் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில், தோழர் அருணப்பன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. பொன்னுசாமி (கம்.), மு. முத்துரத்தினம் (தி. மு. க.), சுந்தரராஜ் (சோஷ) ஆகியோரும், மற்றும் கணபதி, கருப்பணன் ஆகியோரும் பேசினர்.

கடைசியாக, தியாகிகளுக்கு அனுதாபமும், மத்திய சர்க்காரின் போக்கிற்குக் கண்டனமும் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், இறுதியாக அனைவரும் அமைதியாக எழுந்து நின்று மறைந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

தர்மபுரி

22—8—55-ல், தருமபுரி நகரத்தின் எல்லாக் கடைகளும், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பாங்குகள், திரைப்படக் கொட்டகைகள் ஆகியவை அனைத்தும் மூடப்பட்டு, கோவா விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தின. மாலை 3-30 மணியளவில், விவேகானந்தா நகர மாளிகையிலிருந்து, வர்த்தகர் சங்கம், தி. மு. கழகம், காங்கிரஸ், ம சோ., கம்யூனிஸ்டு ஆகியவற்றின் தொண்டர்கள் தங்கள் தங்கள் கொடிகளுடன் ஊர்வலமாக வந்தனர்; பின்னர், தீர்த்தகிரியார் மைதானத்தில், மு. ப. சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் டி. சி. கிருஷ்ணமூர்த்தி, ராஜகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றினர் கோவா துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், உயிரிழந்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், கோவாவை விடுவிக்க தக்க இராணுவ நடவடிக்கை எடுக்கும்படி இந்திய சர்க்காரை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துறையூர்

18—8—55ல், துறையூரில், பூரண கடையடைப்பு நடைபெற்றது அன்று மாலை மாரியம்மன் கோவிலுக்கு முன்னர் திரு. பெருமாள் அவர்களது தலைமையில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில், தோழர்கள் முத்துநாகப்பன், வேலுசாமி, எம். ஆர். சாமிநாதன், கே. மாரிகிருஷ்ணன், டி. ஆர். முத்தையன், எம். பழனியப்பன், எம் மருதமுத்து (தி மு. க.), எஸ். நடராசன், டி. மருதை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுராந்தகம்

18—8—55ல், மதுராந்தகத்தில் பூரண கடையடைப்பு செய்யப்பட்டது. சர்வ கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. சர்க்கார் காரியாலயங்களும், ஒரு மணி நேரம் மூடப்பட்டு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அன்று மாலை 4 மணிக்கு, காங்கிரஸ், தி. மு. க., பி. சோ. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் தத்தம் கொடிகளுடன் முக்கிய வீதிகளின் வழியாக கண்டன ஒலிமுழக்கங்களுடன் ஊர்வலம் வந்தார்கள். மாலை 6 மணிக்கு காந்தி மேடையில் தோழர் கே. விஜயகாந்தம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கருணாகரன், முத்து, ஏ. எஸ் இமயவரம்பன், ஆ சண்முகம், துரைபாபு, ஆதிகேசவர்மா, ஜீலானி சாயபு ஆகியோர் கோவா சர்க்காரைக் கண்டித்தும், கோவாவை மீட்க இந்திய சர்க்கார் நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினர். பின்னர் கண்டன, அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருமங்கலம்

18—8—55-ல், கோவா படுகொலையை கண்டனம் செய்யவும், உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தவும் கடைகள், பள்ளிகள், தியேட்டர்கள் அனைத்தும் மூடப்பட்டு, வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. நகர தி. மு. கழகம், நெடுஞ்செழியன் மன்றம், காங்கிரஸ், கம்யூனிஸ்டு, ம. சோ., அடங்கிய மாபெரும் ஊர்வலம் மாலை 5 மணிக்கு நடைபெற்று; குமரன் கோயில் முன்பாக உள்ள திடலில், திரு. காவேரி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரசாக், காட்டுவா சிக்கந்தர் (தி மு. க), சின்னையன் (கம்.), சாலியா (சோஷ.), செயின்லாபுதீன், புலி மீனாட்சிசுந்தரம் (காங்.) ஆகியோர் பேசினர்.

ஜோலார்பேட்டை

22-8-55-ல், தோழர் கே. என். கேசவன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் வி என். தந்தப்பன், போர்ச்சுகீசிய ஆதிக்க வெறியர்களின் செய்கையைக் கண்டித்துப் பேசினர். மற்றும் சில தோழர்கள் பேசிய பின், போர்ச்சுகல் ஏகாதிபத்தியத்தின் போக்கைக் கண்டித்தும், இந்தப் போக்கை வளரவிடா வண்ணம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், மற்றும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மாராண்டஅள்ளி

22—8—55-ல், சர்வ கட்சியினரும் அடங்கிய மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. இரவு 10½ மணிக்கு பஸ் நிலையத்தில் சாது சீனிவாசன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பள்ளிச் சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

கவுந்தப்பாடி

21—8—55 காலை நகரிலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. மாலை 4 மணிக்கு, தோழர் பி. ஏ. காளியண்ணன் தலைமையில் சர்வகட்சித் தோழர்களும் தங்கள் தங்கள் கொடிகளுடன் கலந்துகொண்டு ஊர்வலம் வந்தனர் மங்கம்மா சத்திரத்தில், தோழர் பி. ஏ. காளியண்ணன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கா. அண்ணாமலை, இராமசாமி, கா. மா. சென்னியன், க கா. கந்தன், க சி. சின்னத்துரை, பழனியப்பன், பெ. சதாசிவம், வேலவன் ஆகியோர் பேசினர். பின்னர் போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

சூலூர்

18—8—55-ல், ஊர்பூராவும் கடையடைப்பு செய்து, கண்டன ஊர்வலமும் நடத்தப்பட்டது.

சித்தூர்

20—8—55 காலை 9 மணி அளவில், 250 பேருக்கு மேற்பட்ட தி. மு. கழகத் தோழர்கள் கழகக் கொடிகளுடன், போர்ச்சுகல்வெறிச் செயல்களைக் கண்டிக்கும் ஒலி முழக்கம் செய்துகொண்டு நகர வீதிகளில் ஊர்வலம் வந்தனர். ஊர்வலத்தில், 'பாரதி இரவு பள்ளி' மாணவ மாணவிகளும், வியாபாரிகளும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்; கண்டன ஊர்வலம் 'காந்தி சாலை' வட்டகிளை தி மு கழகக் கட்டிடத்தை அடைந்ததும், நடைபெற்ற கூட்டத்தில் கோவா அக்கிரமத்தைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

19—8—55ல் சித்தூர் நகர தி. மு கழகத்தின் சார்பில், கோவா அட்டூழியத்தைக் கண்டித்து, நகர் முழுவதிலும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப் பெற்று வழங்கப்பட்டது.

கழகச் செய்திகள்

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

21—8—55 காலை 10 மணியளவில் கழகப் பணிமனையில் தோழர் ஏ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு பாராட்டுதல் தெரிவித்தும், கோவா விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தொண்டர்களை போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம் சுட்டு வீழ்த்தியதைக் கண்டித்தும் உயிர்நீத்த வீரர்களுக்கு வீரவணக்கமும், காயமுற்று வருந்துபவர்களுக்கு பரிவைத்தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றியும், கழகத் துணைச் செயலாளர் விலகல் கடிதம் திரும்பப் பெறப்பட்டதை ஒப்புக்கொண்டும், கழக 6-வது ஆண்டு விழாவை 9—9—55ல் நடத்துவதெனவும், அது சமயம் பொதுச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு கழகத்தின் சார்பில் தேநீர் விருந்து நடத்துவதெனவும், ஆண்டு விழாவை சிறப்பான முறையில் நடத்த செயலாளர் ஏ.இராதாகிருஷ்ணன் தலைமையில் ஐவரடங்கிய குழுஒன்று நியமிக்கப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டது.

நாகை தி. மு. கழகம்

23—8—55 மாலை 3 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கோவா அட்டூழியத்தைக் கண்டித்தும், உயிர் நீத்த அறப்போர் வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், படுகாயமடைந்தோருக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டும், நாகையில் நடைபெற இருக்கும் சர்வகட்சிக் கண்டன பொதுக் கூட்ட ஊர்வலத்தில் நாகை தி. மு கழகமும் தன் நிலைக்கு ஏற்பப் பங்குகொள்ள செயலாளருக்கு அனுமதி அளித்தும், அந்தப் பொதுக்கூட்டத்தில் பொது மக்களும், மாணவர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றையோரும் பங்குகொண்டு சிறப்பிக்கக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இராசிபுரம் தி. மு. கழகம்

20—8—55 அன்று நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கோவா விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களுக்கும், அடக்குமுறைக்கு ஆளான தொண்டர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தியும், போர்ச்சுகீசிய சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்தும், கழகத்தின் சார்பாக சொற்பயிற்சி மன்றம் ஏற்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வங்கனூர் தி. மு. கழகம்

21—8—55 மாலை 4 மணிக்கு, தோழர் கே. நரசிம்மன் இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், போர்ச்சுகீசிய சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், போராட்ட வீரர்களைப் பாராட்டியும், இரண்டு மாத வரவு—செலவுகளைப் பரிசீலித்து ஒப்புக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொன்மலை—மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

18-8-55 மாலை 7-30 மணிக்கு, கழக இல்லத்தில், தோழர் கே. துரைராஜு தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், மாவட்டச் செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கமும் கலந்துகொண்டார். கூட்டத்தில், தோழர்கள் ஜி. பராங்குசம், பக்கிரிசாமி ஆகியோர் தந்தையார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், கோவா துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், உயிர்துறந்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், கிளைக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க மேலக்கற்கண்டார்கோட்டையில் பொதுக் கூட்டங்கள் நடத்த உபயோகிக்கப்படும் மைதானத்துக்கு 'திரு வி க. திடல்' என்று பெயர் வைத்துள்ள ஆலத்தூர் ஊராட்சி மன்றத்தாருக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், விரைவில் அம்மைதானத்தில் காங்கிரீட் மேடை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டும், செப். 17 முதல் 24 முடிய உள்ள வாரத்தில் கழகச் சார்பில் திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடுவதென்றும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொன்மலைக்கு வரும்பொழுது கழகச் சார்பாக வரவேற்பு கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், மாவட்டச் செயலாளர் தோழர் அம்பில் தர்மலிங்கம், கழக வளர்ச்சி குறித்து சொற்பொழிவாற்றினர்.

லால்பேட்டை தி. மு. க.

21—8—55 இரவு 7 மணிக்கு தோழர் வேணு இல்லத்தில் தோழர் கு. கோவிந்தராசு தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கோவாவில், தொண்டர்களைச் சுட்டு வீழ்த்திய போர்ச்சுகீசிய சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டித்தும், போராட்டத்தில் உயிர் துறந்த தியாகிகளுக்கும், படுகாயம் அடைந்தவர்களுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தோழர் டி. எம். சிங்காரவேலுவின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், 20—8—55 வரை உள்ள கழக வரவு-செலவுக் கணக்குகளைச் சரி பார்த்து ஒப்புக்கொண்டும் முடிவு செய்யப்பட்டது.

கவுந்தப்பாடி தி.மு. கழகம்

19—8—55 மாலை 6-30 மணியளவில், பெரியார் மைதானத்தில், தோழர் பொ. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், திராவிட நாடு பிரிவினை பற்றியும், திராவிடத்தின் இயற்கைச் செல்வங்கள் குறித்தும், ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் தோழர்கள் எஸ். எம். சுப்பிரமணியம், கே. எம். சென்னியன், வேலவன், க. அன்பரசு ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், கோவா போராட்டத்தில் உயிர்நீத்த வீரர்களுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுவை தி. மு. கழக வட்டக் குழு

21—8—55 மாலை 7 மணிக்கு புதுவை தி. மு. கழக வட்டக் குழு, கழக இல்லத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர் செ. கோவிந்தராசன் மற்றும் பலரும் பேசிய பின், கோவா போர்ச்சுகீசிய சர்க்காரின் மிருகவெறிச் செயலை கண்டித்தும், போராட்டத்தில் உயிர்நீத்த தொண்டர்களுக்கு வணக்கம் செலுத்தியும், படுகாயமுற்று வருந்துவோருக்கு ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.கழக நடவடிக்கைகள்

மாநாட்டு நிதிக்கு ரூ. 1,030-9-6

14-8-55 பிற்பகல் 3-மணிக்கு அருப்புக்கோட்டை 'புஷ்ப' மாளிகையில், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், மாவட்டச் செயலாளர் தோழர் இல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையிலும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தின்போது, மாவட்டக் கிளைக்குச் சொந்தமான நிதியை விருதுநகரிலுள்ள 'இந்தியன் பாங்கு லிமிடெட்'டில், மாவட்டச் செயலாளர் தோழர் இல. ம. சௌந்திரபாண்டியன், மாவட்டப் பொருளாளர் தோழர் வ. பெ. வடிவேல் ஆகிய இருவரின் பெயரில் கூட்டாகக் கணக்குவைத்துக் கொள்வதற்கான அதிகாரம் கொடுத்தும்; மாநில மாநாட்டு நிதிக்கு தங்கள் பங்குத் தொகையைச் செலுத்தாத கிளைக் கழகங்கள் விரைவிலேயே தங்கள் பங்குத் தொகையைச் செலுத்தி விடவும், அரைகுறையாக நிதி செலுத்திய கிளைகளும் அவ்வாறே விரைவில் தங்கள் பங்குத் தொகையைக் கொடுத்துவிடவும் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், தி. மு. கழகப் பொதுக் குழுவிற்கு, இராமநாதபுரம் மாவட்டத்தினின் றும் ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலின் போது, தோழர் என். கே. குருசாமி முன்மொழிய, தோழர் இரா. மு. செங்குட்டுவன் வழிமொழிய தோழர் கண்ணதாசன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

* * *

மாநில மாநாட்டிற்கு நிதி ரூ. 1,030—9—6

அன்று இரவு, தோழர் எம். எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம், மாநில மாநாட்டு நிதியாக ரூ. 1,030—9—6 கொடுக்கப் பட்டது.

சென்னையின் சுருக்கப்பட்ட திட்டம்

சில விபரங்கள்

சென்னை, ஆக. 23—

"டெல்லியில், திட்டக் குழுவிற்கும்—சென்னை மந்திரிகளுக்கு மிடையில் நடைபெற்ற விவாதத்தின்போது, சென்னை மாநிலத்தின் இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் அளவு இன்னதென நிர்ணயிக்கப்படவில்லை; திட்டக் குழு சுமார் ரூ. 200-கோடி முதல் 225 கோடி வரை மதிப்புள்ள திட்டத்திற்கு அங்கீகாரம் தரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,"

என்று, சென்னை சர்க்கார், சென்னை மேல்சபை உறுப்பினர்களுக்குத் தந்துள்ள குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அந்த விவாதத்தின் போது, பெரிய, நடுத்தர ரகத் தொழில்களின் அபிவிருத்தி பற்றி மாநில திட்டத்தில் வழிவகை செய்யத் தேவை இல்லையென்றும், அத் தொழில்களை அகில இந்திய ரீதியில் மத்திய சர்க்கார் மேற்கொள்ளுவர் என்று கூறப்பட்டதாகவும், சென்னை சர்க்காரின் குறிப்புக் கூறுகிறது.

அக்குறிப்பில், மேலும் காணப்படும் தகவல்களாவன:—

"இரண்டாம் திட்டத்தில், நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களுக்கு சென்னை கேட்டது ரூ. 100-கோடி; ஆனால், அநேகமாக எதிர்பார்க்கப்படுவது ரூ. 75 கோடி முதல் 80 கோடி வரைதான்.

"அலுமினியம் தொழிற்சாலை நிறுவுவதுபற்றிய சென்னை சர்க்காரின் திட்டம் அங்கீகாரம் பெறவில்லை; மத்திய சர்க்கார் நிறுவும் நிபுணர் குழு ஒன்று விசாரணை செய்து முடிவு மேற்கொண்ட பின்பே அதுபற்றி யோசிக்கப்படும்.

"கன மின்சார இயந்திரங்கள் உற்பத்திக்கு மத்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது; சென்னையின் கோரிக்கை கவனிக்கப்படும்; உறுதி செய்யப்படவில்லை.

"சேலம் இரும்பை உருக்கி உபயோகிக்க ஒரு சோதனை உலை வைப்பது பற்றியும் நிபுணர் குழுவின் விசாரணைக்குப் பிறகே முடிவு மேற்கொள்ளப்படும்.

"காகித ஆலை அமைத்தல், கந்தக அமிலம், 'சூபர் பாஸ்பேட்' முதலியன உற்பத்தி செய்தல்—இவையெல்லாம், தனியார் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டியவை."

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிருப்தி

மலையாள எம். எல். ஏ.-க்கள் சபையிலிருந்து வெளியேறினர்

மேல் சபையிலும் நிகழ்ச்சி

சென்னை, ஆக. 24—

சென்னை சட்டசபையிலும், மேல் (சட்ட) சபையிலும், சென்னை சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ளாமல் மலையாள உறுப்பினர்கள் வெளியேறி விட்டனர்.

சட்டசபையில், நிதி மந்திரி சுப்பிரமணியம், திட்டத்தின் கூறுபாடுகளை விளக்கிய பின்னர்தான், இச்சம்பவம் நடைபெற்றது.

நகல் திட்டத்தில், மலபார் மாவட்டத்தின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்றும், விவாதத்தில் கலந்துகொள்ளாமல் தாங்கள் வெளியேறப் போவதாகவும், மலபார் உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஒரு மனுவை, டாக்டர் கே. பி. மேனன், உதவி சபாநாயகரிடம் அளித்தார்.

இச்சூழ்நிலையில், அமைச்சர் சுப்பிரமணியம் குறுக்கிட்டு, மலையாள மாவட்டத்தின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறி அவர்கள் வெளியேற முடியாதென்றும், வேறு அரசியல் காரணங்களுக்காக அப்படிச் செய்வதானால் தாராளமாகச் செய்யலாமென்றும், வரும் செப். 30-ந் தேதி மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை வரப்போகும் நிலைமைக்குப் பூர்வாங்கமாக மலையாள உறுப்பினர்கள் வெளியேறுகிறார்களோ, என்னவோ என்றும் கூறினர்.

பின்னர்தான், ம. சோ., கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த மலையாள உறுப்பினர்கள் சபையைவிட்டு வெளியேறினர்.

மேல் (சட்ட) சபையில் மந்திரி பக்தவத்சலம் திட்டத்தை சமர்ப்பித்தவுடன், மலையாளத்திற்கு வேண்டிய அபிவிருத்தி வேலைகள் 2-வது திட்டத்தில் அதிகமாகச் சேர்க்கப்படவில்லை என்று ஆட்சேபித்து, தான் விவாதத்தில் கலந்துகொள்ள இயலாது என்று கூறி சபையில் உள்ள ஒரே மலையாள உறுப்பினரான எம் பி. கோவிந்த மேனன் வெளியேறினர்.

வற்புறுத்தியுள்ளனர்!

கோவை, ஆக. 23—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 3.12 கோடி செலவில் ஒரு காகித ஆலை துவக்க வேண்டுமென, கோவை மாவட்டம் வற்புறுத்திவருவதாக, மாவட்ட அதிகாரி பி கே. நம்பியார் தெரிவித்திருக்கிறார்.

தென்னாற்காடு மாவட்டத்தில்

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

23-8-55 காலை 9: கடலூர் நியூ சினிமாவில் சிறப்புக் கூட்டம்;
பகல் 12: புகழேந்தி இல்லத்தில் விருந்து;
பகல் 2: மாவட்டக் குழுக் கூட்டம்;
மாலை 3: நெல்லிக்குப்பம் ஊராட்சி மன்ற வரவேற்பு;
மாலை 6: பொதுக் கூட்டம்.

29-8-55 காலை 10: உளுந்தூர்ப்பேட்டை தோழர் சண்முகத்தின் செல்விக்கு பெயர் சூட்டு விழா;
மாலை 4: தியாகதுருவம் பொதுக்கூட்டம்;
இரவு 7: விழுப்புரம் பொதுக்கூட்டம்.

30-8-55 மாலை 6: சிதம்பரம் பொதுக்கூட்டம்;
இரவு 10: 'பாப்பிரம்மம்' நாடகத் தலைமை.

31-8-55 மாலை 6: திட்டக்குடி பொதுக்கூட்டம்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

புதுக்கோட்டை வருகை

28—8—55 காலை 7½ மணிக்கு புதுக்கோட்டை புதுகைவண்டி நிலையத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும், அன்று மாலை பொதுக்கூட்டமும் நடைபெறும்.

ஆலந்தூர் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

27—8—55 இரவு 8 மணிக்கு ஆலந்தூர் தி மு கழக செயற்குழுக் கூட்டம், கழக இல்லத்தில் நடைபெறும்.

பம்பாய்—தாராவி தி.மு.கழக உறுப்பினர்கட்கு

28—8—55 மாலை 6½ மணிக்கு, பம்பாய்-தாராவி திராவிடகழகத் தில் கிளைக் கழகத் துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் தேர்தல், தேர்தல் அதிகாரி தோழர் எஸ் வள்ளிநாயகம் தலைமையில் நடைபெறும்.

மறுமலர்ச்சி மன்றம் திறப்பு விழாப் பொதுக்கூட்டம்

27—8—55 மாலை 6 மணிக்கு சித்தேரி கிராமத்தில், தோழர் ஏ. எல் சி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. ஏ. பருல், வெ. அ. இளஞ்செழியன், சி ஏ. வரதராசன் ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

27-8-55 பிற்பகல் 2½ மணிக்கு, தாய்மார் கழகச் சார்பில், சென்னை பெத்தநாய்க்கன்பேட்டை, முத்து கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், 'குற்றங்கடிதல்' என்பது குறித்து, திருமயிலை சிவமுத்து சொற்பொழிவாற்றுவார்.

சென்னை தமிழாசிரியர் கழக உறுப்பினர் பொதுக்கூட்டம்

27—8—55 மாலை 4½ மணிக்கு சென்னை, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும் அது போது, பல பொருட்கள் குறித்த ஆய்ந்து முடிவு செய்யப்படும்.

மாணவர் மன்ற உறுப்பினர் பொதுக்கூட்டம்

28—8—55 பிற்பகல் 3-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 17, இரத்தின முதலி தெருவில் உள்ள மாணவர் மன்ற அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது, பல பொருட்கள் குறித்து ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

எது 'பொது சேவை'?

ரூ. 100 செலவில் அமைத்த பாதையை திறக்க ரூ. 500 செலவிடுவதா?

சென்னை, ஆக. 24—

"தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள், சிறிய நடை பாதைகள் ஆகியவற்றைத் திறப்பது போன்ற நிகழ்ச்சிகளும் கூட, மந்திரிகளின் சுற்றுப் பிரயாணத்தில் உத்தியோகப் பூர்வமான நிகழ்ச்சிகளா?"

என்று, பி. சோ. கட்சி உறுப்பினரொருவர், சட்ட சபையில் கேள்வி எழுப்பினர்.

"இது ஜனநாயகக் காலம்; பாமர மக்களுடன் தொடர்பு கொள்ள இதுபோன்ற நிகழ்ச்சிகளில், அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டியுள்ளது; ஆனால் சோஷலிஸ்டு கட்சியினர் அதிகாரத்தில் இருந்தால், இம்மாதிரியான சாதாரண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல், பணக்காரர்கள் உள்ள பெரிய விழாக்களில்தான் கலந்துகொள்வர் போலும்," என்று நிதிஅமைச்சர் கூறினர்.

"ரூ 100 செலவில் அமைக்கப்பட்ட ஒரு சிறிய பாதையைத் திறந்துவைக்க ரூ 500-க்குப் பொதுமக்கள் பணத்தைச் செலவிடுவதுதான் பொது சேவையா?"

என்று, அதே உறுப்பினர் மீண்டும் கேட்டார். அமைச்சர் பதில் சொல்லவில்லை.

"இம்மாதிரியான சிறிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள சுற்றுப் பயணம் செய்வதைவிட, தலைமை அலுவலகத்தில் இருந்து கொண்டே நல்ல பணியாற்றுவதே உசிதமானது என்பதை அமைச்சர்கள் உணர வேண்டும்,"

என்று, மற்றொரு உறுப்பினர் குறிப்பிட்டார்.

அமைச்சருக்குத் தெரியாதாம்!

திட்டம் ஒன்று இருப்பதாகத் தோன்றவும் இல்லையாம்!

சென்னை, ஆக 24—

"மத்திய ஆட்சியின் அனுமதியுடன் சென்னை சர்க்கார் அதிகாரிகள், கட்டாயமாக இந்திசுற்றுக்கொள்ள வேண்டுமென்ற திட்டம் இருப்பதாகச் சென்னை சர்க்காருக்குத் தெரியாது; அவ்வாறு எந்தத் திட்டமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை"

என்று, சென்னை சட்டசபையில் விவசாய அமைச்சர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

சாகுபடியாளர் பாதுகாப்பு மசோதா

சட்டசபையில் நிறைவேற்றம்

சென்னை, ஆக. 24—

சென்னை சாகுபடியாளர் பாதுகாப்பு மசோதா சட்ட சபையில் நிறைவேறியுள்ளது.

நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுத்து, சாகுபடியாளர்களுக்கு ஓராண்டு காலம் பாதுகாப்பு அளிப்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.

"என்னதான் சட்டமியற்றப்பட்டாலும், இரு தரப்பினரும் சமரசமாக ஒத்துப்போவதே சிறந்ததாகும். நீண்ட காலமாக இருந்து வரும் உறவைப் பலப்படுத்தி, இரு சாராரும் நடப்பதே முக்கியமானது," என்று, ரெவினியூ மந்திரி குறிப்பிட்டார்.

சம்பள உயர்வு அளிக்கும் யோசனை கிடையாதாம்!

"நிலச் சீர்திருத்தம் ஏற்படப்போவதை முன்னிட்டு, கிராம அதிகாரிகளுக்கு இடைக்கால சம்பள உயர்வு அளிக்கும் யோசனை எதுவும் கிடையாது," என்று, சென்னை சட்ட சபையில், அமைச்சர் மாணிக்கவேலர் அறிவித்துள்ளார்.

'சாதிப் பெயர்கள் பிரசுரமானதேன்?'

மேல் சபையில் கேள்வி

சென்னை, ஆக. 24—

"நடைபெறப்போகும் சென்னை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர் கூளோ அவர்களின் சாதிப்பெயரோடு குறிப்பிட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதேன்?—குறவர் சாதியென் றுகூட குறிப்பிடப்பட்டதேன்?—இவ்வாறு சாதிகளைக் குறிப்பது, அரசியல் சட்டத்தில் அனுமதிக்கப்படவில்லையே?—சர்க்கார் இதுபற்றி விளக்கவேண்டும்"

என்று சென்னை மேல் (சட்ட) சபையில் கேட்கப்பட்டது.

அமைச்சர் எஸ். எஸ். இராமசாமி பதிலளிக்கையில், 1948-ம் ஆண்டு வாக்காளர் பட்டியல் விதிகள் சென்னை நகரசபை தேர்தலில் பின்பற்றப்படுகிறதென்றும், அதில் சாதி பெயர்கள் உள்ளனவென்றும், புதிய முறைப்படி தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியல் 1—10—55-லிருந்துதான் அமுலுக்கு வருமென்றும், ஆனால் அதற்குள் நகரசபைத் தேர்தல் வந்து விட்டதென்றும் விளக்கினர்.

நீரூற்று கண்டுபிடித்தல்

மந்திரிகளிடையே கருத்து வேறுபாடு?

சென்னை, ஆக. 24—

"கடந்த 1954 பிப்ரவரி 9-ந் தேதியன்று சென்னை சர்க்கார், கிணறுகள் அமைப்பதற்கு இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, நீரூற்றுக் கண்டுபிடிப்பவர் ஒருவரை நியமித்தனர். அவர், 702 இடங்களை சிபாரிசு செய்தார்; 319 இடங்களில் கிணறுகள் வெட்டப்பட்டன; அவற்றுள் 284 இடங்களில் நீர் கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது," என்று டாக்டர் ஏ. சீனிவாசன் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், மேல் சபையில் பக்தவத்சலம் பதிலளித்தார்.

"நீரூற்றுக் கண்டுபிடிப்பதில் சர்க்காருக்கு நம்பிக்கை இருக்கிறதா?" என்ற ஒரு உபகேள்விக்கு பதிலளிக்கையில், "நீரூற்று கண்டுபிடிப்பது முயற்சித்துப் பார்க்கப்பட்டது; அது முழுவதும் தோல்வியாக இருக்கவில்லை," என்று மந்திரி பதில் தந்திருக்கிறார்.

"முன்பொருநாள், சுகாதார மந்திரி, நீரூற்றுக் கண்டு பிடித்துக் கூறுவதில் தனக்கு நம்பிக்கை இல்லை—என்று கூறியது, சர்க்கார் கட்சித் தலைவருக்குத் தெரியுமா?" என்று, ராஜாராம் என்ற உறுப்பினர் கேட்டார்.

"சுகாதார மந்திரிசபையினர், எந்தவித நீரூற்றுக் கண்டு பிடிப்பவரையும் வேலைக்கு வைத்துக் கொள்ளவில்லை," என்று, பக்தவத்சலம் பதில் தந்திருக்கிறார்.

நியாயமான நிபந்தனைக்கு சென்னை தயாராம்!

"கிருஷ்ணா—பெண்ணாறு தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வருவதில், ஆந்திர சர்க்காரின் நியாயமான நிபந்தனைகளை ஏற்பதற்கு சென்னை தயாராக இருக்கிறது," என்று சென்னை மேல் சபையில் அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

அழகிரி படிப்பக திறப்புவிழா பொதுக்கூட்டம்

27—8—55 மாலை 6 மணிக்கு, பொறையார் கடைத் தெருவில், தோழர் சி. ஜம்பு தலைமையில் நடைபெறும். தோழர் க அன்பழகன் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.